# கல்விக் கண்

## அரசுக்கு மாணவர்கள் வேண்டுகோள்



சென்னை, நவ. 29: சென்னை நகரில் உள்ள அனைத்துப் பள்ளிகளுக்கும் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை விடப்பட்டு இருந்தது.

ஆனால், சேத்துப்பட்டு மு.க.ஸ்டாலின் நகர், ஜோதியம்மாள் நகர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மாணவ- மாணவிகள் ஞாயிற்றுக்கிழமையும் பள்ளிக்குச் செல்வது போல சீருடை அணிந்து இருந்தனர். பள்ளிப் புத்தகங்களை சுமந்தபடி நின்றனர்.

தாங்கள் கல்வியைத் தொடர வழி செய்ய வேண்டும் என்று முதல்வர், துணை முதல்வருக்கு வேண்டுகோள் விடுக்கும் பதாகைகளை ஏந்திய படி ஏக்கத்துடன் காட்சி அளித்தனர்.

இதற்குக் காரணம், கூவம் கரையோரத்தில் கட்டப்பட்டிருந்த மாணவர்களின் வீடுகள் இடிக்கப்பட்டதுதான்.

மதுரவாயல்- துறைமுகம் இடையே பறக்கும் சாலை அமைப்பதற்கான பூர்வாங்கப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. கூவம் கரையோரத்தை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள வீடுகள் இதற்காக இடிக்கப்பட்டு வருகின்றன.

இந்த வீடுகள் இடிப்புக்கு மக்கள் பரவலாக எதிர்ப்பு தெரிவிக்காவிட்டாலும், தங்களது குழந்தைகளின் படிப்பு பாதிக்கப்படுவதை எண்ணி மிகவும் வருத்தம் தெரிவித்துள்ளனர்.

'வீடுகளை இடிக்க வேண்டாம் எனக் கூறவில்லை. இந்தப் பகுதியில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ- மாணவிகள் உள்ளனர். அனைவரும் அருகில் உள்ள பள்ளிகளில் படித்து வருகின்றனர். திடீரென வீடுகளை இடித்து விட்டு, துரைப்பாக்கம் போன்ற தொலைதூர இடங்களுக்குச் செல்லுமாறு கூறுகின்றனர். வீடுகளை இடம் மாற்றினால், மாணவர்களின் படிப்பு பாதிக்கப்படும். இதனால், மே மாத வாக்கில் வீடுகளை இடிக்குமாறு அதிகாரிகளிடம் கூறினோம். ஆனால், இதற்கு செவி சாய்க்காமல் வீடுகளை இடித்துத் தள்ளி வருகின்றனர்' என்று அந்தப் பகுதி மக்கள் கூறுகின்றனர்.

## நூல்கள் வெளியீடு...



அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர்கள் சங்கமும், சோலை பதிப்பகமும் இணைந்து சென்னை கன்னிமாரா நூலகத்தில் ஞாயிற்றுக்கிழமை நடத்திய விழாவில் கவிஞர் சோலை தமிழினியன் தொகுத்த ''அன்புள்ள அப்பாவுக்கு, அன்புள்ள அம்மாவுக்கு, கவிதைச் சரம், கட்டுரை களஞ்சியம்'' ஆகிய நூல்களை கம்பன் கழகத் தலைவர் ஆர்.எம்.வீரப்பன் வெளியிட பெறுகிறார் எழுத்தாளர் கார்முகிலோன். உடன் (இடமிருந்து) சங்கத் தலைவர் விக்கிரமன், பொதுச்செயலர் கவிஞர் சுடர் முருகையா.



## பெருமாள் வீதியுலா



கருடசேவையை முன்ன
கருட வாகனத்தில் வீதி

## நாளை திருவ

திருவண்ணாமலை, நவ. 29: திரு